# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 13,354—1962 ඔක්තෝබර් 19 වැනි සිකුරාදා—1962.10.19**

13,354 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | 555 |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 557 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 555 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைச் சட்டம்

#### அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில் தேசீயமய சேவை மந்திரி பின்வரும் நியமனங்களைச் செய்துள்ளாரென்று, 1943 ம் ஆண்டின் சம்பளச்சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது :—

(1) உறைநீர், வளிநீர் உற்பத்தித் தொழிற் சம்பளச் சபையில் முதலாளிகளின் பிரதிநிதியாகவிருந்த திரு. டபிள்யு. எம். எம். ஆரியசேன சம்பளச் சபைச் சட்டத்தின் 12 (2) ம் பிரிவின் பிரகாரம் தாமாக விலகியதாக கருதப்பட்டமையால் அவருக்குப்பதிலாக திரு. எப். எஸ். கந்தப்பா என்பவர் ;

(2) உறைநீர், வளிநீர் உற்பத்தித் தொழிற் சம்பளச் சபையில் முதலாளிகளின் பிரதிநிதியாகவிருந்த திரு. கே. தியாகராஜா சம்பளச் சபைச் சட்டத்தின் 12 (2) ம் பிரிவின் பிரகாரம் தாமாக விலகியதாகக் கருதப்பட்டமையால் அவருக்குப்பதிலாக திரு.சீ.பீ. வீரசிங்கா என்பவர் ;

(3) உறைநீர், வளிநீர் உற்பத்தித் தொழிற் சம்பளச் சபையில் முதலாளிகளின் பிரதிநிதியாகவிருந்த திரு. கே. வி. குணசேன தாமாக விலகியதால் அவருக்குப்பதிலாக திரு. கே. கே. ஏ. ரணவீர என்பவர்.

வி. சா. ம. த மெல்,
தொழில் தேசீயமய சேவை
மந்திரி காரியாலய நிரந்தரக்
காரியதரிசி.

கொழும்பு,
1962 ம் ஆடு ஒகரோபர் மீ 11 ந் தேதி.

10-668

## இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள்

### அனுபந்தம் A

அரசாங்க சேவை சகாய நிதி—1960, செப்டெம்பர் மாதம் 30 ம் திகதி வரைக்குமான ஐந்தொகைக் கணக்கு

| பொறுப்பு | ரூ. ச. | | இருப்பு முதலீடுகள் விபரம் | முகவிலை ரூ. ச. | சந்தைவிலை ரூ. ச. | கொள்விலை ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|
| சந்தாக் கணக்கு (கட்டாயம்) .. | 14,686,422 87 .. | 3½% | நாட்டுப் பாதுகாப்புக் கடன் 1962/67 .. | 118,700 0 .. | 120,332 12 .. | 115,700 0 |
| சந்தாக் கணக்கு (விருப்பப்படி).. | 333,342 57 .. | 3½% | நாட்டுப் பாதுகாப்புக் கடன் 1963/67 .. | 352,800 0 .. | 360,297 0 .. | 361,550 0 |
| போனஸ் .. ... | 20,367,767 54 .. | 3½% | தேசீயக்கடன் 1964/69 | 768,000 0 .. | 790,080 0 .. | 739,948 75 |
| இலங்கை அரசாங்கக் கணக்கு 1959-60 ம் ஆண்டிற்கான தாபனச் செலவு .. | 139,518 29 | 3 % | தேசீய அபிவிருத்திக் கடன் 1965/70 .. | 2,040,500 0 .. | 2,046,876 56 .. | 2,004,140 50 |
| வருமான பகிர் கணக்கு .. | 57,019 38 .. | 2½% | தேசீய அபிவிருத்திக் கடன் 1967/72 .. | 2,000,000 0 .. | 1,896,250 0 .. | 2,000,000 0 |
| | | 3 % | ஸ்ரீ லங்கா கடன் 1969/74 .. | 1,250,000 0 .. | 1,237,500 0 .. | 1,250,000 0 |
| | | 3 % | இலங்கை அரசாங்கக் கடன் 1966/71 .. | 1,000,000 0 .. | 1,001,875 0 .. | 1,000,000 0 |
| | | 3 % | இலங்கை அரசாங்கக் கடன் 1972/77 .. | 1,500,000 0 .. | 1,437,187 50 .. | 1,500,000 0 |
| | | 3 % | இலங்கை அரசாங்கக் கடன் 1973/78 .. | 1,250,000 0 .. | 1,189,843 75 .. | 1,250,000 0 |
| | | 3½% | இலங்கை அரசாங்கக் கடன் 1959/61 .. | 1,250,000 0 .. | 1,255,468 75 .. | 1,237,500 0 |

| பொறுப்பு | | இருப்பு முதலீடுகள் விபரம் | முகவிலை ரூ. ச. | சந்தை விலை ரூ. ச. | கொள்விலை ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| | 3 % | வெற்றிக்கடன் 1965/70 | 100,000 0 .. | 100,437 50 .. | 90,000 0 |
| | 3½% | இலங்கை அரசாங்கக் கடன் 1959/64 .. | 105,000 0 .. | 105,459 37 .. | 102,637 50 |
| | 3¼% | இலங்கை அரசாங்கக் கடன் 1964 .. | 500,000 0 .. | 509,687 50 .. | 500,000 0 |
| | 3¼% | தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன் 1970/72 .. | 1,000,000 0 .. | 1,026,250 0 .. | 1,000,000 0 |
| | 2½% | இலங்கை அரசாங்கக் கடன் 1960/62 .. | 1,250,000 0 .. | 1,249,218 75 .. | 1,250,000 0 |
| | 3¼% | இலங்கை அரசாங்கக் கடன் 1975/80 .. | 1,000,000 0 .. | 961,250 0 .. | 1,000,000 0 |
| | 3 % | தேசிய வீடமைப்புத் தொகுதிகடன் 1969/71 | 1,000,000 0 .. | 1,002,500 0 .. | 1,000,000 0 |
| | 3¼% | இலங்கை அரசாங்கக் கடன் 1976/81 .. | 1,000,000 0 .. | 959,375 0 .. | 1,000,000 0 |
| | 3 % | இலங்கை அரசாங்கக் கடன் 1969/72 .. | 2,000,000 0 .. | 1,997,500 0 .. | 2,000,000 0 |
| | 3¼% | இலங்கை அரசாங்கக் கடன் 1973/77 .. | 1,500,000 0 .. | 1,485,937 50 .. | 1,500,000 0 |
| | 3¼% | இலங்கை அரசாங்கக் கடன் 1975/79 .. | 2,000,000 0 .. | 1,962,500 0 .. | 2,000,000 0 |
| | 3¼% | இலங்கை அரசாங்கக் கடன் "ஆ" 1975/79 | 2,000,000 0 .. | 1,956,250 0 .. | 2,000,000 0 |
| | 3½% | இலங்கை அரசாங்கக் கடன் 1976/80 .. | 4,000,000 0 .. | 4,017,500 0 .. | 4,000,000 0 |
| | | | 28,985,000 0 | 28,669,576 30 | 28,901,476 75 |
| | | இலங்கை சேமிப்பு வங்கி (பாஸ் புத்தகம் இலக்கம் 185075) | | .. | 15,995 34 |
| | | முற்றுப் பெறுத கணக்கில் | .. | .. .. | 1,849 64 |
| | | | | .. | 1,000,000 0 |
| | | ரொக்கம் திறைசேரியின் பிரதிக் காரியதரிசியிடம் | | .. .. | 5,664,748 92 |
| 35,584,070 65 | | | | | 35,584,070 65 |

**1960, செப்டம்பர் மாதம் 30 ம் திகதியன்று முடிவடைந்த வருடத்துக்கான வரவு செலவுகள் பற்றிய விபரம்**

| வரவு | ரூ. ச. | ரூ. ச. | செலவு | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| | | | முதலீடுகளுக்கு :— | | |
| 1.10.59 ல் திறைசேரி பிரதிக் காரியாதிகாரியின் கணக்கில் .. .. .. | | 6,122,848 62 | (அ) இலங்கை அரசாங்கக் கடன் | 4,000,000 0 | |
| | | | (ஆ) இலங்கை சேமிப்பு வங்கிக்கு | 390 12 | |
| சந்தா (கட்டாய) கணக்கில் .. | 3,353,270 87 | | (இ) .. | 1,000,000 0 | |
| சந்தா (விருப்பப்படி) கணக்கில் .. | 61,852 43 | | | .. | 5,000,390 12 |
| | .. | 3,415,123 30 | | | |
| கணக்குகளின் போனஸில் :— | | | " கணக்குகளின் தீர்ப்புகளுக்கு " :— | | |
| (அ) கட்டாய சந்தா .. | 4,614,398 0 | | (அ) கட்டாய சந்தா .. | 1,606,246 70 | |
| (ஆ) இன்சூரன்ஸ் தவணைப் பணம் .. | 3,593 95 | | (ஆ) விரும்பிச் செலுத்தும் சந்தா .. | 120,428 36 | |
| | .. | 4,617,991 95 | (இ) போனஸ் .. | 2,417,631 27 | |
| | | | | .. | 4,144,306 33 |
| முதலீடுகளின் வட்டி :— | | | தாபனச் செலவுகளுக்கு :— | | |
| (அ) இலங்கை அரசாங்கக் கடன் | 768,327 29 | | 1958/59 இல் .. | .. | 144,951 55 |
| (ஆ) இலங்கை சேமிப்பு வங்கி .. | 390 12 | | முற்றுப் பெறுத கணக்கிலிருந்து திருப்பிக் கொடுக்கப்பட்டது .. | .. | 1,002,096 87 |
| | .. | 768,717 41 | | | |
| முற்றுப் பெறுத கணக்கில் | .. | 1,001,812 51 | பாக்கி .. .. | .. | 5,664,748 92 |
| | | 15,926,493 79 | | | 15,926,493 79 |

**வருமான பகிர் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| விரும்பி செலுத்தும் சந்தா (நாட்குறிப்புச் செம்மையாக்கல் 53) .. .. | 0 2 | பாக்கி .. .. .. | 39,073 84 |
| போனஸ் (நாட்குறிப்புச் செம்மையாக்கல் 54) .. | 0 36 | வட்டிக்கணக்கிலிருந்து மாற்றப்பட்ட தொகை .. | 768,717 41 |
| கணக்குகள் சம்பந்தமான 2% வட்டிகளில் :— | | | |
| (அ) கட்டாய சந்தா .. .. | 263,266 52 | | |
| (ஆ) விரும்பி செலுத்தும் சந்தா .. .. | 6,742 42 | | |
| (இ) போனஸ் .. .. | 341,244 26 | | |
| (ஈ) தாபனச் செலவு 59/60 .. .. | 139,518 29 | | |
| (உ) வருமான பகிர் கணக்குப் பாக்கி .. | 57,019 38 | | |
| | 807,791 25 | | 807,791 25 |

வ. வி. ஜோர்ச்,
அரசாங்க சேவை சகாய நிதி நிர்வாகச் சபைக் காரியதரிசி.

கு. பாலசிங்கம்,
திறைசேரி பிரதிக் காரியதரிசியும், அரசாங்க சேவை சகாய நிதி நிர்வாக சபைத் தலைவரும்.

கொழும்பு,
1961 ம் ஆண்டு ஏப்பிரில் மீ 11 ந் உ.

10-868.

# அரசாங்கப் பகுதிகளின் நானுவித அறிவித்தல்கள்

## துவக்கு உத்தரவுப் பத்திரங்கள் புதுப்பித்தல், குருநாக்கல் மாவட்டம்—1963

1963 ஆம் ஆண்டுக்குரிய துவக்கு உத்தரவுப் பத்திரம் புதுப்பித்தல் 1962 நவம்பர், 1 ஆம் திகதி ஆரம்பமாகும். துவக்குச் சொந்தக்காரர் அவரவர் பகுதிப் பதிவு காரியாதிகாரிக்கு மனுச்செய்தல் வேண்டும். 1963 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை அவ்வப் பகுதிப் பதிவுகாரியாதிகாரிகளால் துவக்கு உத்தரவு பத்திரங்கள் புதுப்பித்துக் கொடுக்கப்படும். இதன் பின்னர் குருநாக்கல் கச்சேரியிலேயே உத்தரவுப் பத்திரங்கள் புதுப்பிக்கப்படும். பகுதிப் பதிவுகாரியாதிகாரிகளின் முக வரி பின்வருமாறு :—

1. டீ. ஆர். ஓ., தம்பதெனிய கத்பத்து, பொல்காவெல.
2. டீ. ஆர். ஓ., தேவமெதி கத்பத்து, வாரியப்பொல.
3. டீ. ஆர் ஓ., ஹிரியால கத்பத்து, இப்பகமுவ.
4. டீ. ஆர். ஓ., கட்டுகம்பொல கத்பத்து, குளியாப்பிற்றிய.
5. டீ. ஆர். ஓ., வன்னி கத்பத்து, தலதாகம, மாகோ.
6. டீ. ஆர். ஓ., வேயுடவில்லி கத்பத்து, குருநாக்கல்.

2. துவக்கு உத்தரவுப் பத்திரத்தின் பேரில் முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. உத்தரவுப் பத்திரங்களை இழந்தவிடத்து, துவக்கு உத்தரவுப் பத்திரம் புதுப்பிக்கு முன்னரே ரூபா 1/- செலுத்தி அவ்வப் பகுதிப் பதிவுகாரியாதிகாரியிடமிருந்து உத்தரவுப்பத்திரத்தின் நகல் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பழைய உத்தரவுப் பத்திரமோ அல்லது சான்று பெற்ற இழந்த உத்தரவுப் பத்திரத்தின் நகலோ சமர்ப்பிக்காதவிடத்து உத்தரவுப் பத்திரங்கள் புதுப்பிக்கப்படமாட்டா. இக்கால எல்லைக்குள் துவக்கு புதுப்பிக்கும் பத்திரங்கள் குருநாக்கல் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. 1962 ஆம் ஆண்டு டிஸம்பர் மாதம், 31 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ துவக்குச் சொந்தக்காரர் உத்தரவுப் பத்திரங்களை புதுப்பிக்கத் தவறுவாராயின் உத்தரவுப் பத்திரத்துக்குச் செலுத்தவேண்டிய தொகைக்கு மேல் அதே அளவு தொகை குற்றப்பணமாக அறவிடப்படும். துவக்குச் சொந்தக்காரர்கள் 31.3.63 க்கு முன்பாக உத்தரவுப் பத்திரங்களைப் புதுப்பிக்கத் தவறினால் அவர்கள் மேல் வழக்குத் தொடரப்படும்.

3. உத்தரவுப் பத்திரம் புதுப்பித்தற்கு மனுச் செய்யுங்கால், உத்தரவுப்பத்திரம் வழங்கும் குறித்த துவக்கை எனது அதிகாரத்தின் பேரில் எனக்காக உத்தரவுப்பத்திரங்கள் புதுப்பிக்கும் உத்தியோகத்தர்களின் பரிசோதனைக்கு காட்டவேண்டுமென்று இத்தால் அறிவிக்கிறேன். துவக்கு பாவிக்கமுடியாத நிலையில் இருக்குமாயின் அந்தப் பகுதிப் பதிவுகாரியாதிகாரியிடம் 1962 ஆம் ஆண்டுக்குரிய உத்தரவுப் பத்திரத்துடன், 1962 ஆம் ஆண்டு டிஸம்பர் மாதம் 31 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ ஒப்படைக்கவேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் துவக்குச் சொந்தக்காரர்கள் 1963 ஆம் ஆண்டுக்குரிய உத்தரவுப் பத்திரம் வழக்கம்போல் அதற்குரிய கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டியவராவர்.

ஈ. எம். விஜேநாயக,
அரசாங்க மாவட்ட அதிபர்,
குருநாக்கல் மாவட்டம்.

கச்சேரி,
குருநாகல்,
1962 ஆம் ஆண்டு ஒக்ரோபர் ௴ 8 ந் உ.

10—533

---

## 1963 ம் ஆண்டுக்குரிய துவக்கு முதலியனவற்றின் உத்தரவுப் பத்திரம் புதுப்பித்தல்

துவக்கு முதலியனவற்றின் சொந்தக்காரர்கள் 1963 ம் ஆண்டுக்குரிய உத்தரவுப் பத்திரங்களை 1962 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15 ந் திகதி தொடக்கம் மார்கழி மாதம் 31 ம் திகதிக்கு முன்பு புதுப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். 1962 ம் ஆண்டு உத்தரவுப் பத்திரம் கைவசம் இல்லையாயின் புதுப்பிக்கப்படும் ஒவ்வொரு உத்தரவுப் பத்திரத்திற்கும் ரூபா 1/- கூடுதலாகக்கொடுபடவேண்டும். உத்தரவுப் பத்திரங்கள் மார்கழி மாதம் 31 ந் திகதிக்கு முன்பு புதுப்பிக்கப்படா விட்டால், அதற்கேற்ற உத்தரவுப் பத்திரத்திற்குரிய பணத்துடன் சமமான தொகை கூடுதலாகக் கட்டப்படவேண்டும்.

கொழும்பு மாநகரசபை உட்பட கொழும்பு காரியாதிகாரியின் எல்லைக் குள்ளும், தெஹிவளை–கல்கிசை மாநகரசபை எல்லைக்குள்ளும், கோட்டே, கொலனுவ நகர சபை எல்லைக்குள்ளும், மஹறாகம பட்டினசபை எல்லைக்குள்ளும், கோட்டே–கல்கிஸ்ஸ, அம்பற்றலன்பஹல கிராமச் சங்கங்களின் எல்லைக்குள்ளும் வசிக்கும் துவக்குமுதலியனவற்றின் சொந்தக்காரர்கள் தங்களது உத்தரவுப் பத்திரங்களை கொழும்புக் கச்சேரியில் புதுப்பிக்கவேண்டும்.

மேற் கூறப்பட்ட பகுதிகள் அல்லாத பிற பகுதிகளில் வசிக்கும் துவக்கு முதலியனவற்றின் சொந்தக்காரர்கள் அவ்வப்பகுதிகளிலுள்ள காரியாதிகாரிகளிடம் தங்களது 1963 ம் ஆண்டுக்குரிய உத்தரவுப் பத்திரங்களைப் புதுப்பித்துக்கொள்ளவும்.

1963 ம் ஆண்டுக்குரிய துவக்கு முதலியனவற்றின் உத்தரவுப் பத்திரங் கள் புதுப்பிக்கப்படும்போது 1962 ம் ஆண்டுக்குரிய உத்தரவுப் பத்திரம் காண்பிக்கப்படவேண்டும். றிவோல்வர்கள், பிஸ்ரோல்கள் வைத்திருக்கும் சொந்தக்காரர்கள் உத்தரவுப் பத்திரம் புதுப்பிக்க விண்ணப்பிக்கும்போது அவ்வாயுதங்களைப் பரிசோதனைக்குக் கொண்டுவரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

துப்பாக்கி முதலியனவற்றின் இலக்கமும், மற்றைய விபரங்களும் உத்தரவுப் பத்திரத்தில் குறிக்கப்பட்டிருக்கும் இலக்கத்துடனும், மற்றைய விபரங்களுடன் பொருந்தாததும் அல்லது இலக்கம், மற்றைய விபரங்கள் குறிக்கப்படாததுமான உத்தரவுப் பத்திரங்கள் புதுப்பிக்கப்படும்போது சொந்தக்காரர்கள் யாவரும் தமது ஆயுதங்களை பரிசோதனைக்காகக் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

1963 ம் ஆண்டுக்குரிய உத்தரவுப் பத்திரக்கட்டணம் பின்வருமாறு :—

| | ரூபா. |
|---|---|
| 1. ஒவ்வொரு ஒற்றைக்குழாய்ச் சன்னத்துவக்கிற்கும் .. | 1 0 |
| 2. ஒவ்வொரு இரட்டைக்குழாய் சன்னத்துவக்கிற்கும் .. | 2 0 |
| 3. சுழல்துப்பாக்கி அல்லது தானக இயங்கும் கைத்துப்பாக்கி அல்லாத மற்றும் துவக்கு, கைத்துப்பாக்கி முதலியனவற்றில் ஒன்றுக்கு .. .. | 2 50 |
| 4. ஒவ்வொரு இரட்டைக்குழாய் துவக்கிற்கும் .. | 5 0 |
| 5. ஒவ்வொரு மூன்றுகுழாய் துவக்கிற்கும் .. .. | 7 50 |
| 6. றைவில் துப்பாக்கி ஒன்றுக்கு .. .. | 10 0 |
| 7. சுழல்துப்பாக்கி அல்லது தானக இயங்கும் கைத்துப்பாக்கி– ஒன்றுக்கு .. .. .. | 25 0 |

ஜி. பி. தம்பையா,
அரசாங்க அதிபர்,
கொழும்பு மாவட்டம்.

1962 ம் ௵ ஐப்பசி ௴ 15 ந் உ.

10–811.

---

## 1952 ம் ஆண்டின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்களின் கீழ் விளம்பரம்

1952 ம் ஆண்டின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்களின் III ம் பாகத்தின் " இ " என்னும் தலைப்பின்கீழ் வரும் 4 (3) ம் பிரமாணத்தின்படி 21 வது தொடர்ச்சி அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்கள் 1962 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22 ந் திகதி திங்கட்கிழமை அமுலுக்கு வருமென இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. ஆகவே 21 வது தொடர்ச்சி அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தில் 1 என்னும் இலக்கம் இடப்பட்ட கூப்பன் 1962 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22 ந் திகதி தொடங்கும் கிழமைக்கு வலிமையுடையது. 2 என்னும் இலக்கமிடப்பட்டிருக்கும் கூப்பன் 1962 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29 ந் திகதி தொடங்கும் கிழமைக்கு வலிமையுடையதாயும், இவ்வண்ணமே நடைபெறும்.

ஆர். எல். ஆர்னேல்டா,
உணவுக் கட்டுப்பாட்டதிகாரி.

கொழும்பு,
1962 ம் ௵ அக்டோபர் ௴ 15 ந் உ.

10–758.

## (மிருகங்கள்) தொற்றுநோய்க் கட்டளைச் சட்டம்

பிரதான அரசாங்க மிருக வைத்தியரான அபேரத்ன பண்டாரநாயக ஆகிய நான் 1957 ம் ஆண்டின் 33 ம் இலக்கச் சட்டத்தினால் மாற்றியமைக்கப்பட்டுள்ளபடியான (மிருகங்கள்) தொற்றுநோய்க் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 420) 18 ம் பிரிவினால் எனக்கு உரிமையாக்கப்பட்டுள்ள தத்துவத்தைக்கொண்டு இதன்மூலம்—

(1) கொழும்பு மாநகரசபை முதல்வருக்கு மேற்கூறிய கட்டளைச் சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்டுள்ள எல்லா ஒழுங்கு விதிகளினதும் கட்டளைகளினதும் ஏற்பாடுகளை செயற்படுத்தலையும், நிறைவேற்றுதலையும் கையளிக்கிறேன். அத்துடன்—

(2) காலத்துக்குக்காலம் விதிப்பதற்குத் தகுந்தவையாய் என்று கருதப்படும் அத்தகைய வரையறைவுகளுக்கமைய, மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் எனக்குரிமையாக்கப்பட்டும், சுமத்தப்பட்டுமுள்ள எல்லாத் தத்துவங்களையும் கடமைகளையும் கொழும்பு மாநகர எல்லைக்குள் பிரயோகிக்கவும் ஆற்றவும் குறிப்பிட்ட மாநகர சபை முதல்வருக்கு அதிகாரமளிக்கிறேன்,

என இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

அபேரத்ன பண்டாரநாயக,
பிரதான மிருக வைத்தியர்.

பிரதான அரசாங்க மிருக வைத்தியர் காரியாலயம்,
பேராதனை, 1962 ஆண்டு அக்டோபர் மீ 12 ந் உ.

10–740

---

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

---

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது